# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்



## THE WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

மரம் 3 டிசம்பர் 2002 கனி 1

ஆசிரியர்
B. அர்ஜுனன்

உன் அலங்கத்திற்குள்ளே சமாதானமும்,
உன் அரமனைகளுக்குள்ளே சுகமும் இருப்பதாக — சங். 122 : 7

கிறிஸ்துவின் வசனம்



வல்லமையுள்ள வசனம்

தருமபுரி மாவட்டம் வேப்பிலைபட்டியில் நடைபெற்ற
எட்டாவது வாசகர் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்கள்

## ஆசிரியர் கடிதம்...

வாசகர்களுக்கு,

வல்ல இயேசுவின் தூய நாமத்தில் வாழ்த்துக்கள். இவ்வருடத்தின் இறுதிமாதத்தை காணசெய்த தேவனுக்கு ஸ்தோத்திரம். ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாசகர்களை தேவன் கொடுத்துள்ளார். அவர்களுக்கு அன்பின் செய்தியை அள்ளி வழங்குவதில் ஆனந்தம் கொள்கிறேன். எத்திக்கும் சென்று சுவிசேஷம் அறிவிப்பதில் எல்லையில்லா சந்தோஷம் அடைகிறேன்.

இவ்வளவுக்கும் காரணம் உங்களின் ஊன்றுகோலான ஜெபம் மற்றும் உதவிகள். கர்த்தர் நம்மோடு இருக்கும்வரை நம்மை எவராலும் கடுகளவும் அசைக்க முடியாது. நித்திய வாழ்வை நினைத்து ஒவ்வொரு நாளும் நீதிக்காகப் போராடுவோம்.

முழங்காலில் நின்று, முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழுப் பெலத்தோடும், முழுச் சிந்தையோடும் தேவனில் அன்புகூர்ந்து அவரை ஆராதிப்போம். வரப்போகும் புதுவருடத்தில் நமக்கு புத்துயிர் கிடைக்க ஜெபியுங்கள்!

கர்த்தரின் பணியில்
**B. அர்ஜுனன்**

FOR FREE DISTRIBUTION

"Go ye into all the world, and preach the gospel to every creature" Mark 16:15

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் 3 டிசம்பர் 2002 கனி 1

ஆசிரியருரை

# நீ என்னை நேசிக்கிறாயா?

## Lovest thou me?



இக்கேள்வியை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவனாகிய பேதுருவைப் பார்த்து மூன்று முறை கேட்டார். ஆனால் அவர் மற்ற அப்போஸ்தலர்களைப் பார்த்து இந்த விதமான கேள்வியைக் கேட்கவில்லை. காரணம், இவனே இயேசுவை மூன்று முறை மறுதலித்தவன். ஆகையால் ஆண்டவர் இவனைப்பார்த்து இப்படிக் கேட்டிருக்கலாம்.

பேதுரு இயேசுவை மறுதலிக்கும் முன்பு "ஆண்டவரே, காவலிலும் சாவிலும் உம்மைப் பின்பற்றிவர, ஆயத்தமாயிருக்கிறேன்" (லூக்கா 22:23) என்றான். இதைக் கேட்ட ஆண்டவர்: "பேதுருவே, இன்றைக்குச் சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை அறிந்திருக்கிறதை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார்"(லூக்கா 22:34). அந்தப்படியே அன்று சேனைத் தலைவர்கள் இயேசுவைப் பிடித்து பிரதான ஆசாரியனுடைய வீட்டில் வைத்திருந்தபோது, காவலிலும் சாவிலும் உம்மைப் பின்பற்றிவர ஆயத்தமாயிருக்கிறேன் என்று சொன்ன பேதுரு அவரை நான் அறியேன் என்று மூன்று முறையும் மறுதலித்தான். இவன் இப்படி மறுதலித்தபடியால் இயேசு உயிர்த்தெழுந்தபின் மூன்றாவது முறையாக சீஷர்களுக்கு தரிசனம் ஆனபொழுது "யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா? என்றார். பேதுரு துக்கப்பட்டு: ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர் என்றான். இயேசு: என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார்" (யோவான் 21:17). முதலாவது அவர் தன்னை நேசித்து தம்முடைய ஊழியத்திற்கென்று அழைத்தபடியாலும், அவர் தன்னுடைய சகல

பெலவீனங்களையும் அறிந்திருந்தபடியாலும் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர் என்றான்.

இச்செய்தியை வாசிக்கின்ற சகோதரனே, சகோதரியே, நீ யாரை நேசிக்கின்றாய்? உன் தகப்பனையா, தாயையா? அல்லது உன் மகனையா, மகளையா? நேசிப்பது தவறு என்றோ அல்லது நேசிக்கக்கூடாது என்றோ நான் சொல்லவில்லை. "தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல" (மத். 10:37) என்று கிறிஸ்துவானவர் குறிப்பிடுகிறார். தகப்பனோ, தாயோ நம்மை இரட்சிக்க முடியாது. "நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப்.4:12). ஆகையால் நம்முடைய குடும்பத்தாரைக் காட்டிலும் நாம் இயேசுவை அதிகமாக நேசிக்கவேண்டும். இயேசுவுக்கு முதலிடம் கொடுக்காமல் உலகத்தையும் உலகத்தில் உள்ள உறவுகளையும் அதிகம் நேசிக்க ஆரம்பிக்கும்போது அது நம்மை கொஞ்சம் கொஞ்சமாக கிறிஸ்துவின் அன்பைவிட்டு பிரிந்துபோகச் செய்துவிடும்.

ஒரு பக்தியற்ற தகப்பன் கிறிஸ்துவுக்கு விரோதமாக வாழும்போது தன்னை நேசிக்கும் மகனையும் அவ்வழியே கொண்டு சென்றுவிடுவான். ஆனால் ஆபிரகாமைப் பாருங்கள், வயது சென்ற நாட்களில் ஈசாக்கைப் பெற்றான். ஆகையால் அவன் மீது பாசம்வைத்திருக்கவேண்டும். இந்நிலையில் கர்த்தர் ஆபிரகாமை நோக்கி:"உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக் கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு என்றார்" (ஆதி. 22:2). இதைக் கேட்ட ஆபிரகாம் என் நேசகுமாரனை நான் எப்படி பலியிடுவேன் என்று சொல்லி கலங்கவில்லை. ஏனென்றால் அவன் அவனுடைய மகனுக்கும் அதிகமாய் கர்த்தரை நேசித்து அவரில் அன்புகூர்ந்திருந்தான். ஆகையால்தான் ஆபிரகாம் விசுவாசத்தின் தகப்பன் என்று அழைக்கப்படுகிறான். இப்படிப்பட்ட நம்பிக்கை நமக்குள்ளும் எழும்பவேண்டும். "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுப் பலத்தோடும் உன் முழுச் சிந்தையோடும் அன்புகூர்ந்து" (லூக்கா 10:27) என வாசிக்கின்றோம். இந்த விதமாக தேவனில் அன்புகூருகிறீர்களா? மரியாளுடைய அன்பைப் பாருங்கள்: "என் நேசர் என்னுடையவர், நான் அவருடையவள்" (உன். 2:16) என்ற வசனத்திற்கேற்ப தேவையானது ஒன்றே என்று நினைத்து தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள்.

சிலர் இந்த விதமாக தேவனில் அன்புகூர்ந்தும் உலகத்திலுண்டான கண்களின் இச்சைக்கு அடிபணிந்து விடுகிறார்கள். அந்த வகையில் பார்க்கும் போது, சிம்சோன் என்ற ஒரு தேவ மனிதன் பெலிஸ்த பெண்ணைக் கண்டு அவள் தன் கண்ணுக்குப் பிரியமானவள் அவளையே தனக்கு திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்று சொல்லி தன் பெற்றோரின் ஆலோசனையை

தள்ளிவிட்டு அந்தப் பெண்ணை நேசித்தான். அவளோ "நீ என்னை நேசியாமல் என்னைப் பகைக்கிறாய்" (நியா.14:16) என்று சொல்லி அவனிடத்தில் விடுகதைக்குரிய விடையைப் பெற்று, தன் இனத்தாருக்கு தெரியப்படுத்தி அவனைக் கோபக்காரனாகவும் கொலைகாரனாகவும் மாற்றினாள். பின்பு சிம்சோன் தெலீலாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீயோடே சிநேகமாயிருந்தான். அவன் அவளிடத்தில் தன் இருதயத்தில் உள்ளதையெல்லாம் வெளிப்படுத்தினான். "மூடன் தன் உள்ளத்தையெல்லாம் வெளிப்படுத்துகிறான்" (நீதி. 29:11) என்ற வேத வசனப்படி வெளிப்படுத்தி தன் தலை சிரைக்கப்பட்டு முழுபலத்தையும் இழந்து கண்கள் பிடுங்கப்பட்டவனாய் பெலிஸ்தரோடே கூட மடிந்துபோனான். இவன் இஸ்ரவேலை இருபது வருஷம் நியாயம் விசாரித்தவன். ஆவியானவர் அவனோடிருந்தார். ஸ்திரீகளிடத்தில் தன் நேசத்தை வைத்தபடியால் தன் ஜீவனையே இழந்தான். இங்கு இயேசு சொல்வதை கவனியுங்கள்: "உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்"(யோவா. 11:26). இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?

"நாம் இந்த விதமாக தேவனில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை (இயேசுவை) அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது" (1யோவா. 4:10). நம்முடைய நேசம் நம்முடைய இரட்சிப்புக்கு போதுமானது அல்ல. ஆகையால் முதலாவது அவர் நம்மில் அன்புகூர்ந்தார். "அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்" (1 யோவான் 4:19). எனவே "கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்" (எபி. 12:6). ஆகையால் கர்த்தருடைய சிட்சையை அற்பமாய் எண்ணாமல் உணர்வடைவோம். மோசே எங்கும் தேவனுடைய வீட்டில் உண்மையுள்ளவனாயிருந்தான். அப்படிப்பட்ட மோசேயையே 'கன்மலை' விஷயத்தில் தேவன் சிட்சித்தார். தாம் அவனை நேசித்தபடியாலே அப்படிச்செய்தார்.

நேசத்திற்கு இணையானது ஜீவன் ஒன்றே. "அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்" (1யோ.3:16). இந்த அன்பை ருசித்த பர்னபா, பவுல் போன்றவர்களைக் குறித்து லூக்கா (அப். 15:25) எழுதும்போது "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்திற்காகத் தங்கள் பிராணனையும் ஒப்புக்கொடுக்கத் துணிந்தவர்களும்" என்று எழுதுகிறார். "என்னிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும், வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனும், இப்பொழுது இம்மையிலே, துன்பங்களோடேகூட நூறத்தனையாக, வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும்,

மறுமையிலே நித்திய ஜீவனையும் அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன்" (மாற்கு 10:30,31) என்றார் இயேசு. இவர் நமக்காக ஜீவனையே கொடுத்து நம்மில் அன்புகூர்ந்தார். நாம் அவரை நேசிக்கிறோம் என்று சொல்லுகிறோம், ஆனால் நாம் அவருக்காக என்ன செய்திருக்கிறோம்? ஒன்றுமில்லை. நாட்டுக்காக உயிர்நீத்த தியாகிகளுக்கு சிலை வைக்கிறார்கள், பல கல்லூரிகளை அவர்கள் பெயரில் துவக்குகிறார்கள். இப்படி எத்தனை எத்தனையோ. ஆனால் நமக்ககாக ஜீவனையே கொடுத்த இயேசுவுக்காக நாம் என்ன செய்தோம்? சிலை வைக்கவேண்டாம், அவர் பெயரில் கல்லூரிகளும் வேண்டாம். அவர் பெயரால் இயங்குகிற திருச் சபையின் பணிகளைச் செம்மையாக செய்வோம். இதுவே அவர் நமக்கு விட்டு சென்ற பணி. ஆகையால்தான் பேதுருவைப் பார்த்து: நீ என்னை நேசிக்கிறாயா என்று கேட்ட ஆண்டவர் என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார். இன்று அவருடைய ஆடுகள் அங்குமிங்கும் ஓடி காணாமற் போகிறது. அதை தேட வேண்டும். அவைகளை ஒன்று சேர்த்து, நொண்டியானவைகளையும், வியாதி கொண்டவைகளையும் சற்று நிதானமாக பராமரித்து காத்திட வேண்டும். இதுவே நம்முடைய வேலை. இதுவே நாம் அவரை நேசிக்கிற நேசம்.

> "பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள்" (யோவா. 15:9) – இயேசு.



## வேத அறிவுப்போட்டி எண் 27 ல் வெற்றிபெற்றவர்கள்

1. D. ஸ்டாலின்டுவின்கில் - செட்டிபாளையம்
2. S. சேவியர்ராஜா - செட்டிபாளையம்
3. C. பிரவீன் - செட்டிபாளையம்
4. P. டேவிட் - செட்டிபாளையம்
5. B. ராஜேஷ் - செட்டிபாளையம்
6. L. ஈஸ்வரமூர்த்தி - செட்டிபாளையம்
7. Y. சாமுவேல் - செட்டிபாளையம்
8. D. சமாதானராஜு - செட்டிபாளையம்
9. A. ரெபேக்காள் - மதுரை
10. R. மேகநாதன் - செட்டிபாளையம்
11. R. பிளசன் - செட்டிபாளையம்
12. S. தானியேல் - செட்டிபாளையம்
13. N. ஜான்வெஸ்லி - குன்னூர்
14. R. சண்முகம் - வேலம்பாளையம்
15. S. முத்து - சென்னை
16. A. இராஜநாயகம் - மேலகன்னிசேரி
17. Mrs. பேபிராஜா - மதுரை
18. Mrs. வனிதாசாமுவேல் - மதுரை
19. V. கோவலன் - மதுரை
20. M. சத்தியவாசகன் - சேலம்
21. A. சேவியர்மேரி - மதுரை
22. S. நிர்மலாஜான் - மதுரை
23. V. சரவணக்குமார் - கோவை
24. M. சாலமோன் - பெங்களூர்
25. Mrs. லலிதாபிரேமகுமாரி - மதுரை
26. Mrs. சவுதாமினி - சங்ககிரி
27. P. ஹரிகிருஷ்ணன் - தேர்வழி
28. L. ஸ்டீபன் - சென்னை
29. N. ஜேம்ஸ் - செட்டிபாளையம்
30. Sis. ரெஜினாசாலமோன் - பெங்களூர்
31. Mrs. சாராமேக்டலின் - சென்னை
32. N. வரதராஜன் - வெள்ளகோவில்
33. R. பெரியசாமி - சேலூர்
34. N. டேனியல் தமிழ்வாணன் - மேல்விஷாரம்
35. P. ஏசையன்ராஜ் - கோபி
36. Mrs. அலிஸ்மேரியம்மாள் - வத்தலக்குண்டு
37. S. மெர்ஸிவைலட் - வத்தலக்குண்டு
38. S. தண்டபாணி - சிலுவத்தூர்
39. A. மேரியம்மாள் - மதுரை
40. Mrs. செல்வி சத்தியசீலன் - திருவேற்காடு
41. I. எலிசபெத் - சங்ககிரி
42. Mrs. ஜெயந்திநோயல் - சேலம்
43. Mrs. சுவாதி ரவி - சேலம்

**சுற்றுச்சூழலை மாசுபடுத்தாத... ★ ★ ★ ★ ★ ★ ★**

**★ ★ ★ ★ ★ எரிசக்தியில் கவனம் செலுத்துவோம்**

# இன்று கிறிஸ்தவம் ஏன் அவசியமாயிருக்கிறது?

## WHY CHRISTIANITY IS NEEDED TO DAY?

J.C. Choate



இன்று உலகில் ஏராளமான மதங்கள் எண்ணற்ற மார்க்கங்களை எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கின்றன. அவைகளெல்லாம் இருந்தும், கிறிஸ்தவத்தைப் போல் ஒரு மதமும் இல்லை. கிறிஸ்தவத்தைப் போல் அவசியமானது ஒன்றுமில்லை. கிறிஸ்தவமானது இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்ற உண்மையின் அடிப்படையிலானது. இது கிறிஸ்துவிடமிருந்து வந்துள்ளது. இது கிறிஸ்துவின் உபதேசத்திற்குக் கீழ்ப்படிந்தவர்களால் அனுஷ்டிக்கப்பட்டதாயிருக்கிறது.

நாம் ஒருவேளை கிறிஸ்தவத்தில் நம்பிக்கைக் கொள்ளலாம் அல்லது கிறிஸ்துவின் மார்க்கத்தைப் பிரசங்கிக்கலாம், ஆனால் அதை நடைமுறைப்படுத்திக்கொள்ள வேண்டியது மிக முக்கியம். யாக்கோபு, "அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்" (யாக். 1:22) என்றார். மறுபடியும், யாக்கோபு, "சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்" (யாக். 1:25) எனக் கூறினான்.தொடர்ந்து வாசிக்கையில், அவன், "உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னைத் தேவ பக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவ பக்தி வீணாயிருக்கும். திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக் கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது" (யாக். 1:26,27) எனக் கூறுகிறான்.

நிச்சயமாகவே நாமனைவரும் இன்று உலகம் எவ்வளவு பொல்லாங்காயிருக்கிறது என்பது குறித்து எச்சரிக்கையாயிருக்கிறோம். நீதியின் மதிப்பு ஒரு புதிய கீழான நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. அதிகாரமுடைய

வருக்குரிய மரியாதை எங்கும் குறைந்து காணப்படுகிறது. லஞ்சமும், நேர்மையற்ற தன்மையும் இந்நாளினுடையதாயிருக்கிறது. இவ்விதமாகவே காரியங்கள் தொடர்கின்றன, வரப்போகிற உலகம் எவ்வாறிருக்கும்? நிச்சயமாக, நமக்கு சில மாற்றங்கள் அவசியம். ஆனால் எவை உலகத்தை செம்மையானதாக மாற்றக் கூடும்? நான் விசுவாசிக்கிறதும், இவ்வுலகத்திற்கு அவசியமான மற்றெதைக்காட்டிலும் மேலான தூய்மையான புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை, இயேசுகிறிஸ்துவின் உண்மையான மார்க்கத்தைப் பற்றி நான் கூறும்போது ஒருவேளை நீங்கள் ஆச்சரியப்படமாட்டீர்கள். உண்மையின் காரியமாயிருக்கிற, மனிதனின் ஒரே நம்பிக்கை இதுவே. மனுஷர் வித்தியாச மான மார்க்கங்களை நம்பியிருக்கிற அந்த அடிப்படையில் நான் கூறுகிறேன். அவர்கள் சேனைவீரனுக்குரிய வலிமையில் நம்பிக்கையாயிருக்கிறார்கள். அவர்கள் கடினமான காரியங்களில் வைராக்கியம் கொண்டிருக்கிறார்கள். உலகம் இவையெல்லாவற்றிலும் நம்பிக்கை கொண்டிருக்கிறது. ஆனால் இவைகள் உலகை செம்மையாக மாற்றியிருக்கிறதா? மனிதன் சந்தோஷமிக்க வனாயிருக்கிறானா? இல்லை, எதிலும் இல்லை. உண்மையாகவே மாற்றத்தை உண்டாக்கக்கூடிய ஒரே ஒரு காரியம் தேவன், கிறிஸ்து, கிறிஸ்தவம் மட்டுமே. இதுவே இந்த நவீன உலகில் வாழ்வதற்கும் மரிப்பதற்கும் சிலவற்றை மனிதனுக்கு கொடுக்கும்.

ஆவிக்குரியவற்றில், மனிதனுக்கு அவசியமானது கிறிஸ்தவம். எல்லா மத அமைப்புகளின் கருத்துக்களை போல கிறிஸ்தவம் மட்டுமல்ல; தவிர வேதாகமத்தில் நிர்ணயிக்கப்பட்டள்ளதுபோல கிறிஸ்துவின் ஒரே மார்க்கம் அவசியமானது. இது கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தின் மேலும், ஒரே சபையின் அங்கத்தினர்களாயிருப்பதின் மேலும், ஒரே காரியத்தைப் போதிப்பதின் மேலும், இணைத்து கிரியை செய்வதின் மேலும் ஒரே நம்பிக்கையின்மேலும் அமைக்கப்பட்டுள்ளது. இயேசு நாமனைவரும் அவரில் ஒன்றாயிருக்கும்படிக்கு ஜெபித்தார் (யோ. 17). வேதாகமத்தில் பிரிவினை என்பது கண்டிக்கப்படுகிறது (ரோமர் 16:17,18). அதுமாத்திரமல்ல, மனிதருடைய போதனை வேதாகமத்தின் போதனைக்கு விரோதமாயிருந்து அவைகள் பிரிவினையை விளைவிப்பதினால் (மத். 7:21-23) கண்டிக்கப்படுகிறது.

கிறிஸ்தவத்தை நடைமுறைப்படுத்திக் கொள்கின்றவர்கள் நல்ல குடிமக்களை உருவாக்குகின்றனர். அவர்கள் தங்களுடைய நாட்டின் கட்டளைக்குக் கீழ்ப்படிவதில் உண்மையுள்ளவர்களாயிருக்கிறார்கள். அப்போஸ்தலனாகிய பவுல், "எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ள வர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன்; ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனால் நியமிக்கப் பட்டிருக்கிறது. ஆதலால் அதிகாரத்திற்கு எதிர்க்கிறவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்து நிற்கிறான்; அப்படி தங்களுக்குத் தாங்களே ஆக்கினையை வருவித்துக் கொள்ளுகிறார்கள். மேலும் அதிகாரிகள்

நற்கிரியைகளுக்கல்ல, துர்க்கிரியைகளுக்கே பயங்கரமாயிருக்கிறார்கள்; ஆகையால் நீ அதிகாரத்திற்குப் பயப்படாதிருக்க வேண்டுமானால், நன்மை செய், அதினால் உனக்குப் புகழ்ச்சி உண்டாகும். உனக்கு நன்மை உண்டாகும் பொருட்டு, அவன் தேவ ஊழியக்காரனாயிருக்கிறான். நீ தீமைசெய்தால் பயந்திரு; பட்டயத்தை அவன் விருதாவாய்ப் பிடித்திருக்கவில்லை; தீமை செய்கிறவன் மேல் கோபாக்கினை வரப்பண்ணும்படி, அவன் நீதியைச் செலுத்துகிற தேவ ஊழியக்காரனாயிருக்கிறானே. ஆகையால், நீங்கள் கோபாக்கினையினிமித்தம் மாத்திரமல்ல, மனச் சாட்சியினிமித்தமும் கீழ்ப்படிய வேண்டும்" (ரோமர் 13:1-5) என்றான். கிறிஸ்தவர்கள் சரியானபடி வரிகளைச் செலுத்துவதில் உண்மையுள்ளவர்களாய் இருக்கிறார்கள். பவுல் தொடர்ந்து, "இதற்காகவே நீங்கள் வரியையும் கொடுக்கிறீர்கள். அவர்கள் இந்த வேலையைப் பார்த்துவருகிற தேவ ஊழியக்காரராயிருக்கிறார்கள். ஆகையால் யாவருக்கும் செலுத்த வேண்டிய கடமைகளைச் செலுத்துங்கள்; எவனுக்கு வரியைச் செலுத்த வேண்டியதோ அவனுக்கு வரியையும், எவனுக்குத் தீர்வையைச் செலுத்த வேண்டியதோ அவனுக்குத் தீர்வையையும் செலுத்துங்கள்; எவனுக்குப் பயப்படவேண்டியதோ அவனுக்குப் பயப்படுங்கள்; எவனைக் கனம் பண்ணவேண்டியதோ அவனைக் கனம் பண்ணுங்கள்" (ரோமர் 13:6,7) என கூறுகிறான். கிறிஸ்தவர்கள் தங்களுடைய எஜமான்களுக்குக் கனத்தைச் செலுத்துவதில் உண்மையுள்ளவர்களாய் இருக்கிறார்கள். பேதுரு நாம் செய்யும்படிக்கு, "எல்லாரையும் கனம்பண்ணுங்கள்; சகோதரரிடத்தில் அன்புகூருங்கள்; தேவனுக்குப் பயந்திருங்கள்; ராஜாவைக் கனம் பண்ணுங்கள்" (1 பேதுரு 2:7) என நம்மை நினைப்பூட்டுகிறான். அதைப்போல் நாம் நம்முடைய தேசத்தை நேசிக்க வேண்டும். நாம் பார்க்கின்றவற்றையும் நடைமுறைப் படுத்துகின்றவற்றையும் நாம் நேசிக்காவிட்டால், பிறகு முன்னேற்றத்திற்கென்று நாம் காரியங்களை மாற்றியமைக்க முயற்சிக்க வேண்டும். நிச்சயமாகவே நம்முடைய எஜமான்களுக்கு எதிர்த்து செயல்படுவற்கோ, அதிகாரத்திற்குக் கனத்தை செலுத்த மறுப்பதற்காகவோ, வரிகளைச் செலுத்தாமலிருப் பதற்காகவோ, இதுபோன்ற பலவற்றைச் செய்யாமலிருப்பதற்காகவோ ஒரு கிறிஸ்தவன் முயற்சிப்பதில்லை. சிலர் தேசத்திடமிருந்து அல்லது அரசிடமிருந்து பெறக் கூடிய அனைத்தையும் நாடுகின்றனர். ஆனால் திரும்பச் செலுத்துவதில் அவர்கள் ஒருபோதும் கொடுக்க விரும்புகிறதில்லை. ஒரு தேசத்தில் கிறிஸ்தவம் வளரும் போது, அது அதிகாரத்திற்குக் கனத்தைக் கொடுக்கும், நாட்டின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, நாட்டின் மேம்பாட்டிற்காக உதவி செய்யும்.

கிறிஸ்தவத்தை நடைமுறைப்படுத்துகின்றவர்கள் சமூகத் தீமை களுக்கு எதிரானவர்களாயிருக்கிறார்கள். கருக்கலைப்பு, மதுபானம் பண்ணுதல், புகைபிடித்தல், விவாகரத்து, ஒவ்வொரு காரணத்திற்காகவும் மறுதிருமணம் செய்தல், சூதாட்டம், சுயபுணர்ச்சி, லஞ்சம் இன்னும் இது போன்றவைகள் எல்லாம் சமூகத் தீமைகளில் அடங்கும். பவுல், "அநியாயக்

காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை" (கொரி. 6:9,10) என்றான். இப்பேர்பட்ட காரியங்களை நடைமுறைப்படுத்தாது வெறும்மனே குறிப்பிட்டுள்ள ஒரு மார்க்கத்தை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியுமா? மற்ற மார்க்கங்கள் பல பாவம் நிறைந்தவற்றிற்கும் தீயொழுக்க பழக்க வழக்கங்களுக்கு அடிக்கடி மன்னிப்பு அளிக்கின்றன அல்லது ஊக்கப் படுத்துகின்றன. கிறிஸ்தவம் அப்படியல்ல. ஜனங்களுக்குள்ளே கிறிஸ்தவம் நற்காரியங்களைக் கொண்டுவருகிறது. கிறிஸ்தவர்களாயிருக்க உரிமை பாராட்டுகிறவர்கள் தொடர்ந்து கெட்டபழக்க வழக்கங்களில் நிலைத்திருப்பார் களேயானால், அது கிறிஸ்தவம் தவறானது என அர்த்தமாகாது. ஆனால் பாவத்தில் நிலைத்திருப்பதால் அப்பேர்பட்ட தவறானக் காரியங்களை செய்கிறவர்களையே அது குறிக்கிறது. மறுபடியும், பவுல், "மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள்,வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நாம் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்" (கலாத்தியர் 5:19-21) எனக்கூறுகிறான். இது இப்பேர்பட்ட பாவங்களில் நிலைத்திருக் கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்க அல்லது அதனுடைய பங்காக மாறமாட்டார்கள் எனக் கூறுகையில் அவர்கள் தங்களை இரட்சிக்கமாட்டாத இப்பேர்பட்ட காரியங்களைச் செய்யும்படி தொடர்ந்து இதில் நிலைத்திருந்தால் மட்டுமே அதன் காரணத்தினால் அவர்கள் கர்த்தருடைய சபையில் பிரவேசிக்க முடியாது. நிச்சயமாகவே அவர்கள் மனந்திரும்பி கர்த்தருக்குக் கீழ்ப்படியும் போது அவர் அவர்களை இரட்சித்து தம்முடைய சபையில் அவர்களைச் சேர்த்துக் கொள்ளுவார் (மாற்கு 16:16, அப். 2:47). பிறகு கிறிஸ்தவர்களாக, கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினர்களாக, அப்பேர்பட்ட பாவப்பழக்க வழக்கங்களிலிருந்து விலகி கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக தேவபக்தியுள்ள வாழ்க்கை வாழ முயற்சிக்க வேண்டும்.

கிறிஸ்தவத்தை நடைமுறைப் படுத்துகிறவர்கள் தங்களுடைய வாழ்வை மேம்படுத்திக்கொள்ள முயலுகிறார்கள். அவர்கள் சரீரங்களைத் தூய்மையாக வைத்துக்கொள்வதிலும், உடைகளைத் தூய்மையாக வைத்துக் கொள்வதிலும், வீடுகளைத் தூய்மையாக வைத்துக்கொள்வதிலும் விருப்பம் கொள்கிறார்கள். அவர்கள் தங்களுடைய குழந்தைகளுக்குக் கல்வியளிக்க முயற்சிக்கிறார்கள். அவர்கள் கடின உழைப்பாளிகளாகவும் எல்லாரிடமும்

உண்மையுள்ளவர்களாக இருக்கவும் முயற்சிக்கிறார்கள். பவுல், "ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்; பிறனிடத்தில் அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்" (ரோமர் 13:8) எனக் கூறினான். மறுபடியும் அவன், "உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக. தீமையை வெறுத்து, நன்மையைப் பற்றிக் கொண்டிருங்கள். சகோதரசிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள். அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள். நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள், உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள். பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவி செய்யுங்கள்; அந்நியரை உபசரிக்க நாடுங்கள். உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள்; ஆசீர்வதிக்கவேண்டியதேயன்றிச் சபியாதிருங்கள். சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கள்; அழுகிறவர்களுடனே அழுங்கள். ஒருவரோடொருவர் ஏகசிந்தையுள்ளவர்களாயிருங்கள்; மேட்டிமையானவைகளைச் சிந்தியாமல், தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள்; உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள். ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்; எல்லா மனுஷருக்குமுன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்யநாடுங்கள். கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள். பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள். அன்றியும், உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்குப் போஜனங்கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித்தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய். நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு" (ரோமர் 12:9-21) என்று கூறினான்.

கிறிஸ்தவத்தை நடைமுறைப்படுத்துகின்றவர் தங்களுடைய நண்பர்கள் மத்தியில் நற்கிரியைகள் செய்வதில் உண்மையுள்ளவர்களாயிருக்கிறார்கள். இவ்விதமான நற்கிரியைகளில் ஏழைக்கு உதவுதல், தகப்பனற்றவர்களின் தேவைகளை விசாரித்தல், விதவைகளை விசாரித்தல் போன்றவைகள் அடங்குகிறது. கிறிஸ்து, "இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" (மத்.5:16) என்றார்.

இப்போது இவ்விதமான கிறிஸ்தவம் இந்த தேசத்திலோ அல்லது வேறு ஏதாவது ஒரு தேசத்திலோ மற்றும் உலகத்திலுள்ள அனைத்து தேசங்களிலோ நடைமுறைப்படுத்தப்படுகின்றபோது, அனைத்து மனிதவர்க்கமும் நன்மை அடைவார்கள். மேலும் அதிகமதிகமாய் கிறிஸ்தவத்தை

ஏற்றுக்கொள்கையில் மற்றும் கிறிஸ்தவத்தை நடைமுறைப்படுத்துகையில் உலகம் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேற்றம் அடையும். வேதாகம போதனையின்படி கிறிஸ்தவம் நடைமுறைப் படுத்தப்படும்போது அது காரியங்களை மாற்ற முடியும், காரியங்களை மாற்றவும் செய்யும். இவைகளைச் செய்கிறவர்கள் அனைவரும் முன்னேற்றம் அடையும்படிக்கு மாற்றப்பட்டு உள்ளனர்.

ஆனால் இக்கேள்வி எங்கு ஆரம்பிக்கப்பட வேண்டும். உங்களுக்குள் ஆரம்பிக்கப்பட வேண்டும். நீங்கள் ஒரு கிறிஸ்தவனாக இல்லாவிடில், இப்போதே கிறிஸ்தவனாக மாறுங்கள். அப்புறம் நீங்கள் கிறிஸ்தவத்தை நடைமுறைப்படுத்தும்போது நீங்கள் செய்திருக்கிறவற்றை மற்றவர்களையும் செய்ய உற்சாகப்படுத்துங்கள்.

இயேசு கிறிஸ்துவில் நீங்கள் விசுவாசம் கொள்ளுவீர்களென்றால், உங்கள் பாவங்களுக்காக மனந்திரும்பி, கிறிஸ்துவிலுள்ள உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, உங்களுடைய பாவ மன்னிப்புக்கென்று தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், கர்த்தர் உங்களை இரட்சித்து தம்முடைய சபையில் உங்களைச் சேர்த்துக் கொள்ளுவார். அப்போஸ்தலர் புத்தகத்திலுள்ள மனந்திரும்புதலைக் குறித்த அனைத்து நிகழ்ச்சிகளையும் வாசியுங்கள். அப்போது நீங்கள்எல்லோரும் அவர்கள் என்ன செய்தார்கள் என்ற அந்த நிகழ்ச்சியைக் காண்பீர்கள். அந்த ஒரே காரியத்தை நீங்கள் செய்யும்போது கர்த்தர் உங்களையும் இரட்சிப்பார். மாற்கு 16:16; மத்தேயு 10:32, அப். 2:38; மற்றும் அப். 2:47 ஆகிய வேதபகுதிகளை வாசியுங்கள்.



## தெரிந்து கொள்ளுங்கள்!


### பெத்தேல்

*K.R.K. ரவி ஆசீர்*

எரிகோவிலிருந்து வடமேற்கில் சுமார் 20 கி.மீ. தூரத்தில் பெத்தேல் இருக்கிறது. இங்கேதான் தேவன் ஆபிரகாமுக்கு வாக்குபண்ணியது போல், யாக்கோபுக்கும் "உன் சந்ததி பூமியின் தூளைப்போலிருக்கும்... உனக்குள்ளும், உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்" என்று சொன்னார். இவ்வூருக்கு முன்னே "லூஸ்" என்ற பெயர் இருந்தது. பெத்தேல் என்ற பெயரை இவ்வூருக்கு சூட்டியவர் யாக்கோபே. பெத்தேல் என்ற வார்த்தைக்கு தேவனுடைய வீடு என்று பொருள் (ஆதி. 28 : 11 - 19). பதான் அராமிலிருந்து யாக்கோபு இங்கே திரும்பியபின்பு அவருடைய பெயரை கர்த்தர் "இஸ்ரவேல்" என்று மாற்றினார் (ஆதி. 35 : 9, 10). இப்பட்டணம் எருசலேமுக்கு வடக்கே சீகேமுக்குச் செல்லும் வழியில் 12 மைல் தூரத்தில் அமைந்துள்ளது. இப்பொழுது இது பெய்ட்டின் (BEITIN) என்று அழைக்கப்படுகிறது.

ஒரு வழி

# சபைக்கான ஆதாரங்கள்
# REFERENCES TO THE CHURCH




## பாடம் 25

தேவனுடைய ஜனம் (சபை) புதிய ஏற்பாட்டில் 'சொந்தமான' மற்றும் 'குணம்' போன்றவற்றை விவரிக்கும் வார்த்தைகளோடும் சொற்களோடும் குறப்பிடப் பட்டுள்ளது. இவ்வார்த்தைகளும் சொற்களும் விசுவாசத்தைக் காண்பிக்கின்ற சபை அங்கத்தினர்களுக்கு எஜமானாயிருக்கிற வரை அடையாளங்காட்டுகின்றதாகவோ, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் குணத் தைக் காண்பிக்கின்றதாகவோ இருக்கின்றன. இப்பேர்பட்ட வார்த்தைகளும், சொற்களும் அங்கத்தினர்களை ஒன்றிலிருந்து இன்னொன்றிற்குப் பிரிப்பதற் கென சரியான நாமங்கள் சபைக்கு இருந்ததாக ஒருபோதும் அர்த்தப்படுத்த வில்லை. இவைகள் தேவனோடுள்ள அவர்களுடைய உறவில் தேவ ஜனங்களை அடையாளங்காட்டுவதற்கென்று பரிசுத்த ஆவியின் மூலம் பயன்படுத்தப்பட்டிருந்தன. சுவிசேஷத்திற்குத் தன்னிச்சையான தங்களுடைய கீழ்படிதலின் மூலம் தேவனால் உலகத்திலிருந்து அழைக்கப்பட்டிருக்கின்ற ஒரு குழுவாகிய கிறிஸ்தவர்களை குறிப்பிடும்படிக்கு புதிய ஏற்பாட்டில் பொதுவாக பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களின் பட்டியல் பின்வருவனவாகும்.

1. தேவனுடைய சபை (1 கொரி. 1 ; 2)
2. கிறிஸ்துவின் சரீரம் (1 கொரி. 12 : 27; எபே. 1 : 22, 23)
3. கிறிஸ்துவின் சபை (ரோம. 16 : 16)
4. தேவனுடைய வீடு (1 தீமோ. 3 : 15)
5. தேவனுடைய மந்தை (1 பேது. 5 : 2, 3)
6. கிறிஸ்துவின் மணவாட்டி (ரோம. 7 : 4, வெளி. 21 : 9)
7. கர்த்தருடைய (தேவனுடைய) சபை (அப். 20 : 28)
8. தேவனுடைய பண்ணை (எபி. 2 : 19)
9. தேவனுடைய ஆலயம் (1 கொரி. 3 : 16)

கிறிஸ்துவின் சபையில் தனிப்பட்ட அங்கத்தினர்கள் புதிய ஏற்பாட்டில் பின்வரும் வார்த்தைகள் மற்றும் சொற்களால் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள்.

1. சீஷர்கள் (அப். 11 : 26)
2. கிறிஸ்தவர்கள் (அப். 11 : 26, 26 : 28, 1 பேது. 4 : 16)
3. பரிசுத்தவான்கள் (ரோம. 1 : 7, எபே. 1 : 1, பிலி. 1 : 1)
4. தேவனுடைய பிள்ளைகள் (ரோம. 8 : 16, எபே. 5 : 8, 1யோவா. 3 : 10)
5. தேவனுடைய குமாரர் (கலா. 3 : 26, 4 : 5, 1 யோவா. 3 : 1, 2)
6. சகோதரர் (பிலி. 4 : 21, 1 பேது. 2 : 17)
7. பணிவிடைக்காரர் (ரோம. 16 : 1, 2)
8. ஆசாரியர் (1 பேது. 2 : 5, 9, வெளி. 1 : 6)

வேதாகமத்தில் விவரிக்கப்பட்டுள்ள அந்த போதனைகளையும் செயல்பாடுகளையும் விவரிப்பதற்கு வேதாகம குறிப்புகளைப் பயன்படுத்துவதே எப்போதும் ஒரு நல்ல கொள்கையாகும். சகோதரரைப் பிரிக்கின்ற மதஉலகில் பயன்படுத்தப்பட்டுள்ள அந்த நாமங்களை விட்டுவிடுதல் வேண்டும். சகோதரருக்குள்ளே ஒற்றுமையை வளர்க்க வாஞ்சிக்கிறவர்கள் வேதாகமத்தின் அடிப்படையில் சகோதரருக்குள்ளே ஒன்றாயிருக்கும்படிக்கு பாரம்பரிய நாமங்களை எப்போதும் விட்டுவிடுவார்கள்.

**தற்சோதனை :**

1. ______ புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தைகளும், சொற்களும் தேவனுடைய ஜனங்களைப் பற்றியவற்றில் எதற்குக் குறிப்பிடப்படுகிறது?
(A) சொந்தமான B) ஆரம்பமான (C) ஸ்தாபம்

2. ______ "கிறிஸ்துவின் சபை" க்கான ஆதாரம் சபையானது யாருக்குச் சொந்தமானது என பொருள்படுத்துகிறது?
A) பரிசுத்த ஆவிக்கு (B) கிறிஸ்துவுக்கு (C) கிறிஸ்தவர்களுக்கு

ஆம் / இல்லை : சபையின் தலைமைத்துவ பொறுப்பாளர்களாக செயல்படுகின்றவர்கள் அங்கத்தினர்களின் தேவைகளுக்காக அடிமைகளைப் போலவும் செயல்பட வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

**வேதவாசிப்பு** : கலா. 1 : 9 – 18

**வேத ஆராய்ச்சி** : சபையின் சொந்தம் : அப். 20:28; 1கொரி. 6 : 20; தீத். 2 : 14; மனிதனையல்ல தேவனை மகிமைப்படுத்து : யோவா. 12 : 28; 16 : 14; 17 : 5; ரோம. 1 : 21; கலா. 6 : 13, 14; கொலோ. 3 : 17; 1பேது. 4 : 16; வெளி. 4 : 11.

## ஜெபியுங்கள்



1. ஜனவரி மாதம் நடைபெறவிருக்கும் ஒன்பதாவது வாசகர் கருத்தரங்கிற்காக...
2. புத்தாண்டில் புதிய தீர்மானங்கள் எடுக்க...
3. இவ்வருடம் முழுவதும் நம்மைக் காத்த தேவனுக்கு ஸ்தோத்திரம் சொல்லி...

பெண்கள் பகுதி

# பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்!

## *Grieve not the Holy Spirit!*

அன்பான சகோதரிகளே, பரிசுத்த ஆவியை நாம் ***மீட்கப்படும் நாளுக்கென்று*** முத்திரையாகப் பெற்றுள்ளோம் என வேதம் அழகாய் வர்ணிக்கிறது (எபே. 4:30). மேலும், "நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளான போது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள். அவருக்குச் சொந்தமானவர்கள். அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக ***மீட்கப்படுவார்கள்*** என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்" (எபே. 1:13,14) என நமக்கு நித்திய ஜீவனை உறுதிப்படுத்தும்படி எழுதப்பட்டுள்ளது.

நாம் நித்திய மகிழ்ச்சியையும் நித்திய ஜீவனையும் பெறும்படிக்கு நமக்கு அருளப்பட்டுள்ள பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தலாமா? அநேக சமயங்களில் பரிசுத்த ஆவிக்கு விரோதமான காரியங்களில் ஈடுபட்டு அவரை துக்கப்படுத்துகிறவர்களாகவே இருக்கிறோம். இவ்வாறு ஆவியானவரைத் துக்கப்படுத்தும்பொழுது நம்முடைய வாழ்வில் பல இன்னல்களுக்கும் துன்பங்களுககும் ஆளாகி தேவ ஆசீர்வாதங்களையும் பல நன்மைகளையும் இழந்துவிடுகிறோம். பாருங்கள், முதல் நூற்றாண்டிலே கர்த்தருடைய சபையிலே அவருக்குச் சொந்தமானவளாகச் சேர்க்கப்பட்ட சப்பீராள் என்ற சகோதரி பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சொல்லி தன் கணவனோடுகூட மரித்துப் போனாள் (அப்.5:3-10) இவ்வாறாக பொய் சொல்லும்போது பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்துகிறவர்களாகவே இருக்கிறோம். அத்தோடு பல நன்மைகளையும் இழந்துபோகிறோம். பொய் மாத்திரமல்ல சகோதரிகளே, இதுபோன்ற பரிசுத்த ஆவியானவர் வெறுக்கிற இன்னும் அநேக காரியங்கள் . . . . . . கசப்பு, கோபம், மூர்க்கம், கூக்குரல், தூஷணம், மற்ற எந்த துர்க்குணமும் நம்மில் இருக்கின்ற வரை நாம் பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்திக்கொண்டே இருக்கிறோம் என்றுதான் அர்த்தம்.

நாம் ***கசப்பு***ள்ளவர்களாக மாறும்போது நமக்குள் வாசஞ்செய்கிற பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்துகிறோம். ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா? (யாக். 3:11). மற்றவர்கள் மேல் தொடர்ந்து கசப்பான எண்ணங்களைக் கொண்டிருக்கும்போது கசப்பான தண்ணீரைக் கொடுக்கும் ஊற்றுக்கண்ணைப் போல்தான் இருப்போம். நமக்குள் ***கோபம்*** குடி கொண்டிருக்கும் போது நாம் பரிசுத்த ஆவியை துக்கப்படுத்து கிறோம். "மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்க மாட்டாதே"(யாக். 1:20). அந்தப்படியே ***மூர்க்கம்*** கொள்ளும் போதும் பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்துகிறோம். மூர்க்கம் என்பது கோபத்தையும் மிஞ்சி வெறித்தனமான செயலைச் செய்யத் தூண்டிவிடக்கூடிய ஒன்றாகும். "நாம்

எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்; ஒருவன் சொல் தவறாதவனானால் அவன் பூரண புருஷனும், தன் சரீரம் முழுவதையும் கடிவாளத்தினால் அடக்கிக் கொள்ளக்கூடியவனாயிருக்கிறான்" (யாக். 3:2). கட்டுக்கடங்காத குதிரைக்குக் கடிவாளம் போட்டு அடக்குவது போல நம்முடைய முர்க்கத்திற்கும் கடிவாளம் போட்டு கட்டுப்படுத்த வேண்டியது மிக அவசியம். மேலும் கூக்குரலும், **தூஷணம்** நம்முடைய வாயிலிருந்து புறப்படும் போதும் பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்துகிறோம். இயேசுவைக் குறித்து வேதத்தில், "அவர் கூக்குரலிடவுமாட்டார், தம்முடைய சத்தத்தை உயர்த்தவும் அதை வீதியிலே கேட்கப்பண்ணவும் மாட்டார்" (ஏசாயா 42:2). ". . . . . அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை" (ஏசாயா 53:9) என வாசிக்கிறோம். "துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே இப்படியிருக்கலாகாது" என யாக்கோபு ஆசிரியர் எச்சரிக்கிறார் (யாக். 3:10). இன்னும் இதுபோன்ற **வேறு எந்த துர்க்குணமும்** நம்மில் இருக்குமனால் நாம் பரிசுத்த ஆவியைத் துக்கப்டுத்துகிறவர்களாகவே காணப்படுவோம். இக்காரியம் நமக்கும் துக்கத்தையே கொண்டு வருகிறதாயிருக்கிறது.

தேவன் நம்மை ஞானஸ்நானத்திலே இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவி சுத்திகரித்து, அவருக்குச் சொந்தமான ஜனமாக மாற்றி நித்திய ஜீவனை நமக்களிக்கும்படிக்கு பரிசுத்த ஆவியை நமக்குக் கொடுத்திருக்கும் போது, நாய் தான் கக்கினதைத் தின்னவும் கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட பழமொழியின்படி ஜீவிப்போமானால் பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்துகிறவர்களாகவே காணப்படுகிறோம். ஆனால் இவ்விதமாய் கொட்டுப்போய் நித்திய ஜீவனை இழந்து போகாதபடிக்கு நம்முடைய பலவீனங்களில் பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவி செய்கிறார். "நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்" ரோமர் 8:26,27). இப்படிப்பட்ட ஆவியானவர் நம்மில் வாசஞ்செய்யக் கூடியவராயிருக்கிறார். "தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள் மேல் தங்கியிருக்கிறார்" (1 பேது. 4:14).

தேவன் அந்நாட்களில் இஸ்ரவேலரிடம் ஆவியானவரைக் கொண்டு பேசினார். ஆனால், "அவர்களோ கலகம் பண்ணி, அவருடைய பரிசுத்த ஆவியை விசனப்படுத்தினார்கள். . ." (ஏசாயா 63:10). நம்மில் வாசஞ்செய்கின்ற பரிசுத்த ஆவியானவரை நாம் துக்கப்படுத்தாமலும், விசனப் படுத்தாமலுமிருந்து அவர் சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை நடத்த இடங்கொடுப்போமாக! அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடப்போமாக! ஏனென்றால் அவருடைய ". . . . வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது" (யோ. 6:63). ஆவியே நம்மை உயிர்ப்பிக்கிறது. இந்த பரிசுத்த ஆவியானவரை நாம் தொடர்ந்து

துக்கப்படுத்துவோமேயானால், சவுலை விட்டு நீங்கின ஆவியானவர், சவுலினுடைய ராஜ்யபாரத்தைக் கிழித்துப் போட்டதுபோல நம்மையும் விட்டு நீங்கிவிடுவார். நாம் பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவங்களில் நிலைத்திருப்போமானால் நித்திய ஜீவனை இழந்துவிட நேரிடும். நாம் "மீட்கப்படும் நாளுக்கென்று பரிசுத்த ஆவியை முத்திரையாகப் பெற்றுள்ளோம்" எனவே அவரைத் துக்கப்படுத்துகின்ற சகலவித காரியங்களையும் நம்மைவிட்டு நீக்கிப்போடுவோம். பரிசுத்த ஆவியானவர் தாமே நமக்கு உதவி செய்வாராக!

தமிழில் J. குளோரி அர்ஜுனன்

## வேத அறிவுப் போட்டி எண் 27 ன் விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | சாலொமோன் | 1 இரா 8 : 46 | 6. | சமாதானம் | ரோ. 5 : 1 |
| 2. | தேவனுக்கு | அப். 5 : 29 | 7. | உலகத்தை | 1யோ. 5 : 4 |
| 3. | என் புஸ்தகத்திலிருந்து | யாத். 32 : 33 | 8. | பவுல் | 1 தீமோ. 1 : 16 |
| 4. | தேவனுடைய, பாவங்களை | 1 பேது. 4 : 2 | 9. | நியாயப்பிரமாணத்தை | நீதி. 31 : 5 |
| 5. | நான் | எரே. 31 : 14 | 10. | ஆழங்களில் | சங். 107 : 26 |

## பொது அறிவுக் களஞ்சியம்

### இந்திய விமான போக்குவரத்துக் கழகம்

இந்திய விமானப் போக்குவரத்தை, விமானப்போக்குவரத்து அமைச்சகம் கண்காணித்து வருகிறது. ஏர் இந்தியா வெளிநாட்டு விமானப் போக்குவரத்தையும், இந்தியன் ஏர்லைன்ஸ் உள்நாட்டு விமானப் போக்குவரத்தையும் கவனித்து வருகின்றன. இவை இரண்டும் 1953ம் ஆண்டு ஜூன் 15ம் தேதி தோற்றுவிக்கப்பட்டன. தற்போது இவை இரண்டும் தனி நிறுவனங்களாகச் செயல்படுகின்றன.

இந்தியாவில் 85 விமானத்தளங்கள் உள்ளன. சர்வதேச விமான தளங்கள் ஐந்து. அவை மும்பை, கல்கத்தா, புதுடில்லி, சென்னை, திருவனந்தபுரம் ஆகிய முக்கிய நகரங்களில் அமைந்துள்ளன.

## ஏன் இயேசுவின் போதனை மிகுந்த சக்திவாய்ந்ததாய் இருந்தது

- *அவர் ஜனங்களை மரியாதையுடன் நடத்தினார் (மாற்கு 10 : 46 – 52)*
- *அவன் கண்டிப்புடன் பேசினார் (யோவா. 3:1–3; 4 : 1–4 மத். 13; 4 : 19)*
- *அவர் இரக்கம் நிறைந்தவராய் பேசினார் (மாற். 8 : 2, லூக். 13 : 34)*
- *அவர் பாரபட்சம் காட்டவில்லை (மத். 8 : 2, 3; 19 : 14; மாற். 10 : 21)*
- *அவர் மனிதனின் தீராத பிரச்சனையைத் தீர்த்தார் (யோ. 9 : 1 – 38)*
- *அவர் அதிகாரமுடையவராகப் பேசினார் (மத். 7 : 28, 29; 4 : 4 – 10)*
- *அவரது போதனைக்கேற்ப அவருடைய வாழ்வு குற்றமற்றதும், பரிசுத்த முள்ளதுமாயிருந்தது (ஏசா. 53 : 9; எபி. 4 : 15; 7 : 26; யோவா. 8 : 29, 46; 1 பேதுரு 1 : 19)*

# சந்திப்போம் - சிந்திப்போம்

- D. எபிநேசர்

*தாவீது* : புதிருக்கான விடைய 2ம் வசனத்துல பவுல் சொல்றாரு. அவர்களோட விசுவாசமும் பக்தி வைராக்கியமும் அறிவுக்கேற்றதல்ல அப்டிங்கிறாரு.

*யோனத்தான்* : பவுல் ஏன் அப்படிச் சொல்றாரு?

*தாவீது* : அடுத்த வசனத்துல இரண்டு காரணங்கள் சொல்றாரு!

1) தேவ நீதியை அறியாமல் சுய நீதியை அறிந்திருக்கிறார்கள்

2) தேவ நீதிக்குத் கீழ்ப்படியாமல் சுய நீதிக்குத் கீழ்ப்படிந்து இருக்கிறார்கள்.

*யோனத்தான்* : சுய நீதின்னா என்ன?

*தாவீது* : பாரம்பரியமும், மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட உபதேசமும்தான் சுய நீதி.

*யோனத்தான்* : தேவ நீதிய விட்டுட்டு சுய நீதிய விரும்பறதுக்கு என்ன காரணம்?

*தாவீது* : தங்கள் வாழ்க்கைக்கு, உறவுமுறைக்கு, பிள்ளைகளுடைய படிப்புக்கு, வேலைவாய்ப்புக்கு, சுடுகாட்டுக்கு எந்த நீதி வசதியா இருக்குதோ அந்த நீதிய விரும்புறாங்க. மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட சபைகளும் இதுக்கு உத்தரவாதம் அளிக்கிறது. மேலும் நோய்களைத் தீர்ப்பதாகவும், பேய்களை ஓட்டுவதாகவும், கடன்களை அடைப்பதற்கும், கவலைகளை மறப்பதற்கும் கூட உத்தரவாதம் அளிக்கிறார்கள். ஆனால் தப்பித் தவறிக் கூட பரலோக இராஜ்யத்தின் திறவுகோலை அவர்களுக்கு கொடுப்பதில்லை. மத். 23 : 13, லூக். 11 : 52, மனிதர்களின் உபதேசத்தையும், பாரம்பரியத்தையும் மத். 15 : 6 - 9 கிறிஸ்து கண்டிக்கிறார்.

*யோனத்தான்* : அப்படின்னா இன்னைக்கு இருக்கிற அநேக சபைகளும் அதன் விசுவாசிகளோடே இரட்சிப்பும் கேள்விக்குறிதான் இல்லையா?

*தாவீது* : ஆமா யோனத்தான் இஸ்ரவேலரோட பக்தி வைராக்கியம் எப்படி அறிவுக்கேற்றதாக இருக்கவில்லையோ, அதுபோலத்தான் இவர்களுடைய பக்தி வைராக்கியமும் அறிவுக்கேற்றதல்ல.

*யோனத்தான்* : அப்படின்னா தேவ நீதிங்கிறது என்ன?

*தாவீது* : அடுத்த முறை அதைப்பத்தி பேசலாமா யோனத்தான். *Bye... Bye... Seeyou.*

# சிறுவர் பகுதி

# கர்த்தருக்கு விரோதமான கூட்டம்



**வேத பகுதி : எண்ணாகமம் 16 : 1 – 35**

கர்த்தரை ஆராதிக்கிற கூட்டத்தைப் பார்த்து இருப்பீர்கள். ஆனால் கர்த்தருக்கு விரோதமான கூட்டத்தைப் பார்த்து இருக்க மாட்டீர்கள். மேற்கண்ட வேதபகுதியிலே நாம் அவ்விதமான கூட்டத்தாரைப் பார்க்கலாம்.

கோராகு, தாத்தான், அபிராம் போன்றவர்கள் இஸ்ரவேலிலே இருநூற்று ஐம்பது பேரோடு சேர்ந்துகொண்டு மோசேக்கும், ஆரோனுக்கும் விரோதமாக எழும்பி, சபையார் எல்லாரும் பரிசுத்தமானவர்கள், நீங்களோ கர்த்தருடைய சபைக்கு மேலாக உங்களை உயர்த்துகிறீர்கள் என்றார்கள். அதற்கு மோசே கோராகை நோக்கி: நீயும் உன் கூட்டத்தார் அனைவரும் கர்த்தருக்கு விரோதமாகவே கூட்டங்கூடினீர்கள் என்றான். பின்னும் மோசே கோராகை பார்த்து : நீயும் உன் கூட்டத்தார் அனைவரும் நாளைக்குக் கர்த்தருடைய சந்நிதிக்கு வாருங்கள்; உங்களில் ஒவ்வொருவனும் தங்கள் தங்கள் தூபகலசங்களாகிய இருநூற்று ஐம்பது தூபகலசங்களையும் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவர வேண்டும்; நீயும் ஆரோனும் தன் தன் தூபகலசத்தைக் கொண்டு வாருங்கள் என்றான். அப்படியே அவரவர் ஆசரிப்புக் கூடாரவாசலுக்கு முன்பாக வந்து நின்றார்கள். என்ன நடந்தது தெரியுமா?

அப்பொழுது மோசேயோடும், ஆரோனோடும் கர்த்தர் பேசி : இந்த சபையை விட்டுப் பிரிந்துபோங்கள், ஒரு நிமிஷத்திலே அவர்களை அதமாக்குவேன் என்றார். அதற்கு மோசேயும், ஆரோனும் கர்த்தருக்கு முன்பாக முகங்குப்புற விழுந்து தேவனே, மாம்சமான யாவருடைய ஆவிகளுக்கும் தேவனே, ஒரு மனிதன் பாவம் செய்திருக்கச் சபையார் எல்லார் மேலும் கடுங்கோபங் கொள்வீரோ என்றார்கள். அதற்கு கர்த்தர் கோராகு, தாத்தான், அபிராம் என்பவர்களுடைய வாசஸ்தலத்தை விட்டு விலகிப்போங்கள் என்று சபையாருக்குச் சொல் என்றார். அந்தப்படியே அவர்கள் இந்தத் துஷ்டமனிதரின் சகல பாவங்களிலும் நீங்கள் வாரிக்கொள்ளாதபடிக்கு, அவர்கள் கூடாரங்களை விட்டு விலகி, போங்கள் என்றான். அப்பொழுது "பூமி தன் வாயைத் திறந்து, அவர்களையும் அவர்கள் வீடுகளையும், கோராகுக்குரிய எல்லா மனிதரையும், அவர்களுக்கு உண்டான சகல பொருள்களையும் விழுங்கிப்போட்டது".

அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு தூபங்காட்டின இருநூற்று ஐம்பது பேரையும் பட்சித்துப்போட்டது. பார்த்தீர்களா,

பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிக்க முடியாது கர்த்தருக்கு ஊழியம் செய்ய மோசேயும், ஆரோனும் இருக்க அவர்கள் மூலமாய் சொல்லப்படும் தேவவார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் எங்களோடும் கர்த்தர் பேசுவார் என்று சொல்லி மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக கூட்டங்கூடி அழிந்து போனார்கள். ஆகையால் நீங்களும் நானும் நம் சபை ஊழியர்களை மதித்து அவர்களுக்கு விரோதமாகக் கோபங்கொள்ளாமல், ஊழியத்திற்கு உதவியாய் இருக்கவேண்டும்.

**மனப்பாட வசனம்**

**"என் மகனே, நீ கர்த்தருக்கும் ராஜாவுக்கும் பயந்து நட; கலகக்காரரோடு கலவாதே"**

**(நீதிமொழிகள் 24 : 21)**

# இரண்டு வழிகள்

**L. மனாசே மன்னு**

அன்பார்ந்த வாசகர்களே என் அன்பின் நல்வாழ்த்துக்கள் பல! ஒரு மனிதன் ஒரே நேரத்தில் இரண்டு வழிகளில் செல்வதென்றால் அது கூடாத காரியம். ஏதாவது ஒன்றை புறக்கணித்து மற்றொன்றில் நடப்பான். இங்கே இரண்டு வழிகள் என்பது,

1. நித்திய ஜீவனுக்கு போகும் வழி
2. நித்திய அழிவுக்கு போகும் வழி

மனிதனின் ஆத்துமா அழிவில்லாதது. சரீரம் அழிந்துபோகக்கூடியது. இந்த ஆத்துமா சரீரத்தை விட்டுப் பிரிந்த பின்பு நித்திய ஜீவனுக்கும், சரீரம் நித்திய அழிவிற்கும் செல்ல வேண்டும். எனவே, சரீரத்தில் ஆத்துமா இருக்கும் போதே இதைக் குறித்து தீர்மானித்து உண்மைவழியில் நடந்தால் ஒருநாள் நமக்கு மரணம் வரும்போது நாம் எந்த வழியை பின்பற்றினோமோ அங்கே நம் ஆத்துமா செல்லும்.

ஆகையால் எனக்கு பிரியமானவர்களே, நீங்கள் மரித்த பின்பு எங்கே செல்ல விரும்புகிறீர்கள்.

## நமது தலைவர் இயேசு சொன்ன இரண்டு வழிகள்

"இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள். கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய் பிரவேசிக்கிறவர்கள் அனேகர்.

ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக்கண்டுபிடிக்கிறவர்கள் சிலர் - மத். 7 : 13 - 14.

இடுக்கமான வாசலைக் குறித்தும், விசாலமான வாசலைக் குறித்தும் நமக்கு தெளிவாக கூறுகிறார். அனேகர் கேட்டுக்கு போகும் வாசல் வழியே போக

விரும்புகின்றனர். இடுக்கமான வாசல் வழியே செல்ல சிலர் மட்டுமே விரும்புகின்றனர்.

கேட்டுக்குப் போவது அது நித்திய அழிவின் பாதை, இடுக்கமான வாசல் நித்திய ஜீவனுக்குப் போகும் பாதை, விசாலமான வழி அழிவுக்கும், நெருக்கமான வழி ஜீவனுக்கும் ஒப்பிட்டு நமக்கு கூறியிருக்கிறார். இந்த இரண்ட பாதைகளில் நீங்கள் எந்த பாதையை தெரிந்தெடுக்கிறீர்கள்?

*பல பாடுகள் பட்ட தீர்க்கதரிசியாகிய எரேமியா கூறுகிறார்,*

"வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து நல்லவழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்கிறார். அவர்களோ, நாங்கள் அதிலே நடக்கமாட்டோம் என்கிறார்கள்! - எரே. 6 : 16.

இங்கே நாம் பூர்வபாதைகளை அறிந்துகொள்ள மூன்று விஷயங்களை கூர்ந்து கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

1. **நின்று :** முதலாவது நாம் வழிகளில் நின்று எந்த வழி சிறந்த வழி அல்லது நல்ல வழி என்று கவனிக்க வேண்டும். வழிகளை கவனிக்காமல் நம் மனம் போன போக்கில் போனால் அது மிகவும் வேதனைக்குறியதாக மாறிவிடும்.
2. **கேட்க வேண்டும் :** இரண்டாவதாக அந்த வழிகளை குறித்து கேட்டு விசாரிக்க வேண்டும். அதன் முடிவு என்ன என்பதையும் அவ்வழி நமக்கு சரியான வழிதானா என்று விசாரித்து பொறுமையுடன் வழிகளின் வித்தியாசங்களை புரிந்துகொள்ள வேண்டும்.
3. **நடக்க வேண்டும் :** மூன்றாவதாக எவ்வழி சிறந்த வழியோ அவ்வழியில் நடக்க தீர்மானித்து நடக்க வேண்டும். முடிவு நம் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் உண்டாகும். இது எரேமியாவின் மூலம் கர்த்தர் கூறும் ஒரு பாடமாக இருக்கிறது. ஆனாலும், ஜனங்களோ அந்த நல்ல வழிகளில் நடக்க மாட்டோம் என்கிறார்கள் என்று மிகவும் கவலைப்படுகிறார். என் அருமை வாசகரே நீங்கள் சென்று கொண்டிருக்கும் வழியை குறித்து சிந்தித்துப் பாருங்கள். வழிகளில் நின்று, கேட்டு விசாரித்து ஒரு தீர்மானத்தோடு நம் இயேசு சொன்ன நல்வழியில் சென்றால் நித்திய ஜீவன் (ஆத்தும இளைப்பாறுதல்) கட்டாயம் நாம் பெற்றுக் கொள்வோம்.

"நீங்கள் வலதுபுறமாய் சாயும் போதும், இடது புறமாய்ச் சாயும் போதும், வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும். - ஏசாயா 30 : 21.

நாம் நித்திய ஜீவ வழியை விட்டு வலது, இடதுபுறம் சாயும்போது வழி இதுவே இதில் நடவுங்கள் என்ற வார்த்தை நமக்கு கேட்கும் என்று ஏசாயா கூறுகிறார். ஆம் நம் வழிகள் கர்த்தருக்கு முன்பாக இருப்பதாக.

**ஒருவழிப்பாடம் 24ன் விடைகள்**

1. B, 2. B, 3. C, 4. A, 5. A, 6. B, 7. A, 8. B, 9. A

பொருள் : யூதர்கள் பெற்ற வெற்றி
ஆக்கியோன் : மொர்தெகாயாக இருக்கலாம்
காலம் : *450 - 400 கி.மு.*

## திட்டவரைக் குறிப்பு :

★ தேவனுடைய ஜனங்கள் மத்தியிலுள்ள ஒரு கீழ்ப்படிதலுள்ள பெண் தேசிய அளவில் முக்கியத்துவம் பெற முடியும். - (1 : 1 - 3 : 18).
★ அன்னிய அரசுக்கு பணிவிடை செய்வதன் மூலம் தேவனிடம் கொண்டுள்ள விசுவாசத்தை வெளிப்படுத்த முடியும். - (4 : 1 - 17)
★ பொறுப்புள்ள பதவிகள் தேவனிடம் கொண்டுள்ள விசுவாசத்திற்கு அழைப்பு விடுக்கிறது. - (5 : 1 - 8 : 17)
★ வரலாற்றில் உண்மையுள்ள வேலையை கனப்படுத்தும்படிக்கு கிரியை செய்கிறார். - (9 : 1 - 32)
★ தேவன் பணிக்காக அதிக சந்தர்ப்பங்களில் தம்முடைய ஜனங்களை கனப்படுத்துகிறார். - (10 : 1 - 3)

## சிறப்புச் செய்தி :

"நீ இந்த காலத்திலே மவுனமாயிருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும்... நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும்?".

## வரலாற்று பின்னணி :

பெர்சியனான ஆமானின் சூழ்ச்சி, தோல்வியடைந்ததைக் கொண்டாடும் யூதர்களின் பண்டிகை பூரிம்.

**– Selected**

**வேத அறிவுப்போட்டியாளர்கள் கவனத்திற்கு,**

**ஒவ்வொருவருக்கும் ஒரு இதழ் வேண்டுமென விரும்புகிறீர்கள் நல்லது. ஆனால் 'கிறிஸ்துவின் வசன' மாத இதழ் ஒரு குடும்பத்துக்கு ஒரு இதழ் மட்டுமே அனுப்ப இயலும். நீங்கள் வேதாகம கல்லூரியில் படிக்கிறவர்களாக இருந்தால் தயவு செய்து உங்கள் கல்லூரிக்கு வரும் ஒரு சில இதழை நீங்கள் வாங்கி ஜெராக்ஸ் காப்பி எடுத்துக் கொள்ளவும். தயவு செய்து கேட்டு எழுதாதீர்கள். அனுப்ப இயலாது. மன்னிக்கவும்.**

**...இந்தியாவின் ஜனத்தொகை 100 கோடியை தாண்டிவிட்டது தெரியுமா? நமது பத்திரிக்கையினுடைய வளர்ச்சியில் உங்கள் பங்கு என்ன? ஒரு இதழ் அச்சிட ரூபாய் ஐந்து செலவாகிறது.**

# வேத அறிவுப் போட்டி எண். 28

**போட்டியாளர்கள் கவனத்திற்கு,**

கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடைகளை உங்கள் சுயமுயற்சியினால் வேதாகமத்திலிருந்து கண்டுபிடித்து வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் இறுதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பி வைக்க வேண்டும். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம்.

**Ref.No., உங்கள் பெயர், ஊர் மற்றும் தெளிவான முகவரியுடன் எழுதி அனுப்பவும்.**

1. விருத்த சேதனமில்லாதவர்களை தேவன் எதின் மூலமாயும் நீதிமான்களாக்குகிறார்?
2. இயேசுவே கிறிஸ்து என்று வேதவாக்கியங்களைக் கொண்டு திருஷ்டாந்தப் படுத்தினபடியால், கிருபையினாலே விசுவாசிகளானவர்களுக்கு மிகவும் உதவியாயிருந்தவன் யார்?
3. யாருக்காக வெளிச்சமும், யாருக்காக மகிழ்ச்சியும் விதைக்கப்பட்டிருக்கிறது?
4. நான் அவர்களிடத்தில் ஒரு கழுதையை முதலாய் எடுத்துக் கொள்ளவில்லை; அவர்களில் ஒருவனுக்கும் யாதொரு பொல்லாப்பு செய்யவும் இல்லை என்ற தீர்க்கதரிசி யார்?
5. விவாகம் பண்ணினவன் யாருக்கு எப்படி பிரியமாயிருக்கலாமென்று உலகத்திற் குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறான்?
6. நீங்கள் கிறிஸ்துவைப் பற்றும் விருத்தசேதனத்தினாலே மாம்சத்துக்குரிய பாவ சரீரத்தைக் களைந்து விட்டதினால் எதனால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள்?
7. யார், தாவீது சமாதானத்தோடே திரும்பி வருகிற நாள் மட்டும் தன் கால்களைச் சுத்தம் பண்ணவுமில்லை, தன் தாடியைச் சவரம் பண்ணவுமில்லை, தன் வஸ்திரங்களை வெளுக்கவுமில்லை?
8. ஒரு நரி ஏறிப்போனால் அவர்களுடைய கல்மதில் இடிந்து போகும் என்றவன் யார்?
9. விருத்த சேதனமில்லாத புருஷனுக்கு நாங்கள் எங்கள் சகோதரியைக் கொடுக்கலாகாது, அது எங்களுக்கு நிந்தையாயிருக்கும் என்றவர்கள் யார்?
10. அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் என்ன செய்கிறோம்?

## நடப்புச் செய்திகள்

★ *சென்னை கோயம்பேட்டில் ரூ. 103 கோடி செலவில் புதிய பஸ்நிலையம்.*

★ *தமிழகத்துக்கு வறட்சி நிவாரணநிதியாக ரூ. 228 கோடி வழங்க மத்திய அரசு முடிவு.*

★ *மாநில அரசு ஊழியர் சங்க கூட்டமைப்பின் 11வது அகில இந்திய மாநாடு வரும் டிசம்பர் 27ம் தேதி சென்னையில் துவங்குகிறது.*

★ *பாகிஸ்தான் அதிபராக முஷாரப் மீண்டும் பதவியேற்றார். ஐந்து ஆண்டுகாலம் பதவி வகிப்பார்.*


★ *ஆமதாபாத்தில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான 4வது ஒரு தின ஆட்டத்தில் 140 ரன்கள் குவித்த கெயில் ஆட்டநாயகனாகத் தேர்வு செய்யப்பட்டார்.*

Registered with Registrar of Newspapers for India under No. TNTAM/2000/3629
Postal Registration No. TN/SR-164/2002. Licensed to post without prepayment License No. TN/WPP-25/SR/2002. Posted at Batlagundu Post Office on 10th December 2002.

Owned and published by B. Arjunan from 17.2.102D/5, Rajan Nagar, Batlagundu - 624 202. and Printed by V.D. Thankachan at Novelty Press, 3. Dhanappa Mudali Street, Madurai-625 001. **Editor : B. Arjunan.**

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்.



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA ALL INDIA SERVICE

| LANGUAGE | DAY'S | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday Thursday | 6.45 a.m 7.00 a.m 6.45 a.m 7.00 a.m | Box. 3815 New Delhi - 110 049 | SUNNY DAVID |
| TELUGU | Sun,Mon Wed,Thu | 2.00 p.m 2.15 p.m | Box. 80 Kakinada - 533 001 | JOSHUA GOOTAM |
| TAMIL | Mon, Tue, Wed, Thu, Fri | 5.30 p.m 5.45 p.m | Box. 8405 Bangalore - 560 084 | P.R. SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 p.m 4.00 p.m | Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034 | P.K. VARGHESE |

Please write to these addresses for Bible Correspondence Course, Magazines and other Christian Literature in Language

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

Monthly Magazine FOR FREE DISTRIBUTION ONLY

To

From

**Editor**
**THE WORD OF CHRIST**
Post Box No.5,
Batlagundu-624 202.

E-mail : batlagunduchurchofchrist@rediffmail.com